**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 23/2021

06.03.2026.

## DW- 1

**பி.வா.சா.1. உமாமகேஷ்வரி, க/பெ. மணிவண்ணன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து எங்குள்ளது என்றால் - நீடாமங்கலம் தாலுக்கா பூவனூரில் கூசார் தெருவில் உள்ளது. தாவா சொத்து என்பது மனைக்கட்டு ஆகும். எவ்வளவு விஸ்தீரணம் என்றால் - 5.1/2 ஏர்ஸ். சர்வே எண் 583/2, 283/4 ஆகும். எனது ஆவணங்களில் உள்ளதை வைத்து சொல்கிறேன். வழக்கு சொத்துக்களை 2 அயிட்ட சொத்துக்களாக 2 கிரய பத்திரம் மூலம் வாங்கினேன். நான் முத்தையா முதலியாரிடமிருந்து 2015 மற்றும் 2016 ம் ஆண்டுகளில் கிரயம் வாங்கினேன். முத்தையா முதலியார் வழக்கிற்கு பிற்பாடு இறந்துவிட்டார். சரியான தேதி தெரியாது. முத்தையா முதலியாரிடம் என் கணவர் தான் கிரயம் வாங்கினார். கிரய விவரங்கள் அனைத்தும் எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் - நானும் உடனிருந்தேன். எனக்கும் தெரியும். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் - 2024 ல் இறந்துவிட்டார். தாவா சொத்து வாங்கும்போது, முத்தையா முதலியார் மூல பத்திரம் கொடுத்தாரா என்றால் - கொடுக்கவில்லை. ஆனால் காண்பித்தார். அதனை பார்வையிட்டு நானும் எனது கணவரும் கிரயம் வாங்கினோம். முத்தையா முதலியார் காண்பித்த பத்திரம் எந்த வருட பத்திரம் என்றால் -என் கணவர் தான் மூல பத்திரத்தை பார்த்தார். முத்தையா முதலியார் காட்டிய மூல பத்திரம் எது என்றும் அதன் நகலை வாங்க முயற்சித்தேனா என்றால் - நகல் வாங்கவில்லை. முத்தையா முதலியாரும் இந்த வழக்கில் ஆஜராகி என்னோடு சேர்ந்து வழக்கு நடத்தி வந்தார் என்றால் - சரிதான். அவராவது இந்த வழக்கில் வழக்கு சொத்து தனக்கு சொந்தம் என்று ஆவணங்களை தாக்கல் செய்துள்ளாரா என்றால் - தெரியாது. நான் கிரயம் பெற்ற சொத்து முத்தையா முதலியார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று காட்டுவதற்கு அதற்கான நகல்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் - நான் அதற்கான முயற்சி எடுக்கிறேன்.
**(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.